### அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்று இறுதி மரியாதை செலுத்துவார்!

# கேரள அரசியலில் புரட்சிகர மரபை ஆழமாக விட்டுச் சென்றுள்ளார் தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன்! செவ்வணக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!



**சென்னை, ஜூலை 23 -**

**கேரள மாநில முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் (வயது 102) அவர்கள் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார். இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் "கேரள அரசியலில் புரட்சிகர மரபை ஆழமாக விட்டுச் சென்றுள்ளார் தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன்! செவ்வணக்கம்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் சார்பிலும் மக்கள் சார்பாகவும் அச்சுதானந்தன் அவர்களின் இறுதிச் சடங்கில் அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்று மரியாதை செலுத்துவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் (மலையாளத்தில்) பதிந்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

"தோழர் வி.எஸ். அச்சுதானந்தன் அவர்கள் கேரளத்தின் அரசியல் மனச்சான்றில் ஆழப் பதிந்ததொரு புரட்சி மரபை விட்டுச் சென்றிருக்கிறார்.

மக்களின் மனங்கவர்ந்த தலைவர், இறுதி மூச்சு வரையில் பொதுவுடைமைவாதி, முன்னாள் முதலமைச்சர் என கொள்கை அரசியலுக்கும், பொதுத் தொண்டுக்கும் இலக்கணமாக அவர் திகழ்ந்தார்.

வி.எஸ். எனும் ஒரு மிகப் பெரும் ஆளுமையை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், மற்றும் கேரள மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மாபெரும் தலைவரான வி.எஸ். அச்சுதானந்தன் அவர்களுக்கு எனது சார்பிலும் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் அமைச்சர் ரகுபதி நேரில் இறுதி மரியாதை செலுத்திடுவார்.

செவ்வணக்கம் தோழரே!"

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### தருமபுரி மாவட்டத்தில் ITI பட்டதாரிகளின்

# வேலைவாய்ப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 23 - நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி தமிழ்நாட்டில் பின் தங்கிய தருமபுரி மாவட்டத்தில் தொழில் முனைவோருக்கு பயன்படும் வகையில் செயல்படும் தொழில்துறை பயிற்சி நிறுவனங்களின் (ITI) எண்ணிக்கை மற்றும் அதன் விவரங்கள், அந்த மையங்களில் வழங்கப்படும் படிப்புகள் மற்றும் சேர்க்கை புள்ளிவிவரங்கள், அந்த ITI மையங்களில் கிடைக்கும் பயிற்சியின் தரம் மற்றும் அதன் உள்கட்டமைப்பின் தரம், அந்த மையங்களின் தரம் மேம்படுத்துதல் தொடர்பாக ஒன்றிய அரசு சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?அதே போல் தமிழ்நாட்டில், குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் ஏதேனும் புதிய ITIகளை நிறுவ ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? தருமபுரி மாவட்டத்தில் உள்ள ITI பட்டதாரிகளின் வேலைவாய்ப்பை மேம்படுத்த ஒன்றிய அரசால் ஏதேனும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டுள்ளதா? என திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் ஜெயந்த் சௌத்ரியிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ. மணி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விக்கு : தற்போது நாட்டில் 14615 ஐடிஐ க்கள் இயங்கி வருகிறது. அதில் 3316 அரசு மற்றும் 11299 தனியார் ஐடிஐக்கள். தமிழ்நாட்டில் மட்டும் 456 ஐடிஐக்கள் உள்ளது.அதில் 93 அரசு மற்றும் 363 தனியார் ஐடிஐக்கள்.தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 3 ஐடிஐக்கள் அதில் அரசு 1 தனியார் 2 ஆகும்.

ஐடிஐகளின் ஸ்தாபனம் மற்றும் அன்றாட நிர்வாகம் அந்தந்த மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகத்தின் அதிகார வரம்பிற்குள் வருகிறது, அதே நேரத்தில் இணைப்புக்கான அளவுகோல்களை அமைத்தல், தேர்வுகளை நடத்துவது மற்றும் சான்றிதழ் மற்றும் பாடத்திட்டத்தை வடிவமைத்தல் போன்ற கொள்கைகள் மத்திய அரசின் பொறுப்புகளாகும்.

சம்பந்தப்பட்ட மாநில அரசு மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து அவ்வப்போது கூட்டு ஆய்வை நடத்துகிறது. திருத்த நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட இணைப்பு விதிமுறைகளுக்கு இணங்கத் தவறும் ஐ. டி. ஐ. க்கள் இணைப்பு நீக்கம் செய்யப்படுகின்றன. உள்கட்டமைப்பு, ஆசிரியத் தகுதிகள், பாடத்திட்ட அமலாக்கம் மற்றும் பயிற்சி வழங்கல் ஆகியவற்றில் தேவையான தரங்களைப் பராமரிக்கும் ஐ. டி. ஐ. க்கள் மட்டுமே தொடர்ந்து செயல்படுவதை இது உறுதி செய்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த ஆறு கல்வி அமர்வுகளில் (2018-2023) சேர்க்கை இல்லாததால் ஐடிஐகளுடன் இணைந்த சில அலகுகள் ஜனவரி 2025 இல் இணைக்கப்பட்டன,ஐ. டி. ஐ. களில் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். இதை நோக்கி,ஐ. டி. ஐ. களின் இணைப்பின் தரநிலைகள் மற்றும் விதிமுறைகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் திறன்கள் பொருத்தமானதாக இருப்பதை உறுதிசெய்து, சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தொழில்துறை தேவைகளை இணைக்க தொழில்துறைகளுடன் கலந்தாலோசித்து சி. டி. எஸ் இன் கீழ் படிப்புகளின் பாடத்திட்டம் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது.

இவை தவிர, தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கான பின்வரும் திட்டங்களின் கீழ் டிஜிடி நிதி ஒதுக்கியுள்ளது. தொழில்துறை மதிப்பு மேம்பாட்டுக்கான திறன் மேம்பாடு (STRIVE) STRIVE திட்டத்தின் கீழ், தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் (ITI கள்) மற்றும் தொழிற்பயிற்சி மூலம் வழங்கப்படும் திறன் மேம்பாட்டின் பொருத்தத்தையும் செயல்திறனையும் மேம்படுத்த மாநில அரசுகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் இருந்து 32 தொழிற்பயிற்சி நிலையங்கள் உட்பட நாடு முழுவதும் மொத்தம் 500 தொழிற்பயிற்சி நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டன. இத்திட்டம் மே 31,2024 அன்று முடிவடைந்து, இத்திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு மொத்தம் ரூ. 37.82 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எந்த ஐ. டி. ஐ. யும் இத்திட்டத்தின் கீழ் வரவில்லை.

இத்திட்டத்தின் கீழ்,அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மாதிரி தொழிற்பயிற்சி நிலையங்களாக தரம் உயர்த்துதல்,தமிழ்நாடு உட்பட 29 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள 35 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு உதவி வழங்கப்பட்டது. இத்திட்டம் மார்ச் 31,2024 அன்று முடிவடைந்தது,மாதிரி ஐடிஐ திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் ஐடிஐ மேம்படுத்துவதற்காக ரூ. 3.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எந்த ஐ. டி. ஐ. யும் இத்திட்டத்தின் கீழ் வரவில்லை.

மேலும், பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமும், தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப படிப்புகளை சீரமைப்பதன் மூலமும், தொழில்துறை தலைமையிலான நிர்வாகத்தை ஊக்குவிப்பதன் மூலமும் ஐ.டி.ஐ.களை மேம்படுத்துவதற்கான தேசிய திறன் மேம்பாட்டு மையங்களை அமைப்பதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.புதிய படிப்புகளைத் தொடங்குவது உட்பட ஐ.டி.ஐ.களை நிறுவுவது அந்தந்த மாநில அரசின் அதிகார வரம்பின் கீழ் வருகிறது, புதிய ஐ.டி.ஐ.களை அமைப்பதற்காக மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களிடமிருந்து ஒரு முன்மொழிவு பெறப்படும் போதெல்லாம், அது ஆய்வு செய்யப்பட்டு இணைப்பு தரநிலைகள் மற்றும் விதிமுறைகளின்படி முடிவு செய்யப்படுகிறது.தொழில் 4.0 தரநிலைகளை பூர்த்தி செய்ய நவீன உள்கட்டமைப்பு மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில்நுட்ப மையங்களாக மாற்றுவதற்கு தமிழ்நாடு உட்பட பல மாநில அரசுகள் தொழில்துறைகளுடன் ஒத்துழைத்துள்ளன. இந்த ஒத்துழைப்புகள் அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை சார்ந்த பாடத்திட்டங்களுடன் சித்தப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன, இதனால் திறன் இடைவெளியைக் குறைக்கவும், வளர்ந்து வரும் தொழில்துறை நிலப்பரப்பின் தேவைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தவும் முடியும்.

மேலும், தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள ஐடிஐ பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான பின்வரும் முயற்சிகளையும் டிஜிடி மேற்கொண்டுள்ளது.

பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் திறன்கள் பொருத்தமானதாக இருப்பதை உறுதிசெய்து, சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தொழில்துறை தேவைகளை இணைக்க தொழில்துறைகளுடன் கலந்தாலோசித்து சி. டி. எஸ் இன் கீழ் படிப்புகளின் பாடத்திட்டம் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது. சி.டி.எஸ் இன் கீழ் ஒவ்வொரு பாடத்திலும் வேலைவாய்ப்பு திறன்கள் குறித்த கட்டாய பாடம் அடங்கும்.

இந்த தொகுதி நடத்தை, தகவல் தொடர்பு, தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி, பணி நெறிமுறைகள் மற்றும் ஒரு குழுவிற்குள் திறம்பட வேலை செய்வதற்கும் ஒரு தொழில்முறை சூழலில் செழிக்கவும் ஒரு பயிற்சியாளரின் திறனை மேம்படுத்தும் பிற பண்புக் கூறுகள் போன்ற அத்தியாவசிய திறன்களில் கவனம் செலுத்துகிறது.

இரட்டை பயிற்சி முறை (டி.எஸ்.டி.) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இதில் பயிற்சியின் குறிப்பிடத்தக்க பகுதி தொழில்துறையிலேயே நடத்தப்படுகிறது. DST கட்டமைப்பின் கீழ், மொத்தம் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் காலத்துடன் படிப்புகளுக்கு தொழில்துறைகளில் 6 முதல் 12 மாதங்களுக்கு வேலைக்கான பயிற்சி (OJT) வழங்கப்படுகிறது. இந்த ஆழமான அணுகுமுறை ஐ.டி.ஐ.களில் தத்துவார்த்த கற்றலை தொழில்துறை அமைப்புகளில் நடைமுறை, நிஜ உலக அனுபவத்துடன் ஒருங்கிணைக்கிறது.

தமிழ்நாட்டில், தற்போது 15 தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிவியல் தொழில்நுட்பம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று ஒன்றிய அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி பதில் அளித்துள்ளார்.



சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், கடத்தூர் ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் விளக்கங்களை எடுத்துரைத்து முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அ.வெ.அன்புமணிமாறன் முன்னிலை வகித்து, கடத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த பரமேஷ்வரி என்பவரின் மகள் சக்கரை நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு உதவி கோரினார், அதனை தொடர்ந்து ரூ.5,000 நிதியுதவி வழங்கினார். இதில் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



வேலூர் மாநகர் கஸ்பா பகுதி இளைஞர் அணி சார்பில் 41வது வார்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் கழகப் பேச்சாளர் பேரரசன் , மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மேயர் சுஜாதா, ஆனந்தகுமார், முனவர் பாஷா, டாக்டர் சயி, எஸ்.வெங்கடேசன், சுந்தர் விஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


### 'ஓரணியில் தமிழ்நாடு':

# கழக மாணவர் அணியின் விழிப்புணர்வுப் பிரச்சாரம்!

**க**ழகத் தலைவரின் சீறிய முயற்சியில் மக்களை ஒன்றிணைக்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்னும் மாபெரும் முன்னெடுப்பிற்கு வலு சேர்க்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் கழக மாணவர் அணி துண்டறிக்கை மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்கிறது.

முதற்கட்டமாக கழக மாணவர் அணியின் மாநிலச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி கோவையிலும், மாநிலத் துணை செயலாளர்கள் மன்னை த.சோழராஜன் ம.இரா அரசு கலைக் கல்லூரி - மன்னார்குடி, சேலம் இரா.தமிழரசன் அரசு கலைக் கல்லூரி - சேலம் 7, அதலை பி.செந்தில் குமார் எஸ். வெள்ளைச்சாமி நாடார் கலை அறிவியல் கல்லூரி - மதுரை, தமிழ் கா.அமுதரசன் மாநிலக் கல்லூரி - சென்னை, பி.எம்.ஆனந்த்பிஷப் ஹீபர் கலை அறிவியல் கல்லூரி - திருச்சி, வி.ஜி.கோகுல் அரசு கலைக் கல்லூரி - கோவை, திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து எஸ்.எஸ்.ஏ. கலை அறிவியல் கல்லூரி, சிங்கம்புணரி, சிவகங்கை, திருமதி ஜெ.வீரமணி சிக்கய்ய அரசு கலைக் கல்லூரி - ஈரோடு, ஜெ.இராமகிருஷ்ணன் தாகூர் கலை அறிவியல் கல்லூரி - குரோம்பேட்டையிலும் ஓரணியில் தமிழ்நாடு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஒவ்வொரு கழக மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களும் அவரவர் மாவட்டங்களில் கல்லூரிகளின் வாசல்களில் மாணவர்களிடையே துண்டுப் பிரசுரம் மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொண்டனர்.



**இரா.ராஜீவ்காந்தி**
செயலாளர்
கழக மாணவர் அணி

கல்வியில் சிறந்த தமிழ்நாடு எனத் தலைப்பிட்டு, "இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு மட்டும்தான் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது. அதற்குக் காரணம் மற்ற மாநிலங்களில் இருக்கும் தலைவர்களுக்குக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய புரிதல் ஏற்படும் முன்பே இங்கே நீதிக்கட்சி, திராவிட இயக்கம் கல்வி குறித்த விழிப்புணர்வைக் கொண்டுவந்து அது எல்லோருக்குமானதாக்கப் பல்வேறு புரட்சிகரத் திட்டங்களைக் கொண்டுவந்தன.

நம் பெயருக்குப் பின் சாதி இருப்பதைவிட பி.ஏ., எம்.ஏ., பி.எஸ்சி, எம்.எஸ்சி., பி.இ., எம்.பி.பி.எஸ் எனக் கல்விப் பட்டங்கள் இருப்பதைத்தான் திராவிட இயக்கம் விரும்பியது. அதற்காகப் போராடியது. தந்தை பெரியார் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி வேண்டும் என்பதற்காகக் கல்வியில் இட ஒதுக்கீடு வேண்டுமெனப் போராடினார். நீதிக்கட்சி தொடங்கப்பட்ட பின்னர் பொதுப் பள்ளிகள் தொடங்கப்பட்டு கல்வி ஒரு சாதிக்கு, ஒரு தரப்பினருக்கு மட்டுமே என்று இருந்ததை எல்லோருக்கும் பொதுவாக்கினார்கள்.

தொடர்ச்சியாகப் பொதுப்பள்ளிகள் மூலம் மாநகரப் பள்ளிகளைத் தொடங்கினர். அதன் பிறகு கர்மவீரர் காமராஜர் ஊர்தோறும் பள்ளிகளைத் திறந்து மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார். தந்தை பெரியார் காமராஜருக்கு ஆதரவாக அரசியல் பிரச்சாரம் செய்து புரவலர்களைத் திரட்டி சுயநிதிப் பள்ளிகள், கல்லூரிகள் உருவாவதற்கு ஆவண செய்தார். தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு ஊர்தோறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை அமைத்ததோடு இலவசப் பேருந்துப் பயணத்திட்டத்தைக் கொண்டுவந்தார்.

இந்தியாவில் இன்று தமிழ்நாட்டில் இருக்கும் மாணவர்களுக்குத்தான் பிகாருக்கோ, உத்தரபிரதேசத்துக்கு, மத்திய பிரதேசத்துக்கு ஏன் எந்த இந்தி பேசும் மாநிலத்துக்குச் சென்றும் வேலை பார்க்கும் வட இந்தியக் கனவு இல்லை. மாறாக அமெரிக்கா, லண்டன், சிங்கப்பூர் என்று மேலை நாட்டுக் கனவு இருக்கிறது. அதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா தாய்மொழியோடு இணைப்பு மொழியாக ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும் என்று இருமொழிக் கொள்கையைக் கொண்டுவந்ததுதான். அதனால்தான் இடைநிற்றல் இல்லாமல் பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு உயர்கல்வி படிக்கச் செல்லும் மாணவர்கள் விகிதாசாரம் 53 விழுக்காடு பெற்று இந்தியாவில் முதலிடத்திலிருக்கிறது தமிழ்நாடு. இந்த இலக்கை எட்டுவதற்குத் திராவிட இயக்கங்களின் பங்கு மிகப்பெரியது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கல்வி மேம்பாட்டுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி, காலை உணவுத்திட்டம் மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்கள் பசியின்றி பள்ளிப் படிப்பை மகிழ்ச்சியாகத் தொடர வழிவகை செய்திருக்கிறார். கூடுதல் வகுப்பறைகள் தொடங்கி, இடைநிற்றல் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது. அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் வெளிநாடுகளில் செல்வதற்கும் அரசுப்பள்ளி வருமையின் அடையாளம் அல்ல பெருமையின் அடையாளமாகவும் மாற்றியிருக்கிறார்.

உயர்கல்வியிலும் ஆராய்ச்சி கல்வியிலும் கவனம் செலுத்த தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், புதுமைப் பெண் எனப் பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். ஒன்றிய பா.ஜ.க அரசு கல்வியில் மதத்தைப் புகுத்தி, புதிய கல்விக் கொள்கை எனும் மதயானையின் மூலம் எல்லோரும் கல்வி பெறும் சூழலைச் சூழலைச் சிதைத்து, இந்தியைத் திணித்து நமது கலாச்சாரம், தொன்மத்துக்கு எதிராகசமஸ்கிருதத்தை முன்னிலைப்படுத்தி, பல்கலைக்கழக மானியக் குழு என்ற பெயரில் பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர் நியமனத் துக்கு முட்டுக்கட்டை போடுகிறது. கல்லூரிப் பேராசியரிகள் நியமனத்துக்குத் தடை போடுவதோடு இங்கிருக்கும் ஊதியம் கொடுக்கம் கல்வி நிறுவ னங்களை மேம்படுத்தவும் நிதி ஒதுக்க மறுக்கிறது. பள்ளிக்கல்விக்கு வரவேண்டிய அடிப்படை நிதியைக் கொடுக்காமல் வஞ்சிப்பதோடு உயர்கல்விக்கான நிதியையும் கொடுக்காமல் தடித்தனத்தோடு நடந்துகொள்கிறது.

இவற்றையெல்லம் கண்டித்து கல்வியில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கான சம உரிமையைப் பாதுகாக்கும் போராட்டத்தில் சாதி, மதம், இனம், மொழி கடந்து எல்லோரும் ஓரணியில் சேரவேண்டும் என ஓர் இயக்கத்தை முன்னெடுத்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையைக் காக்க அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்

தமிழ்நாடு என்பது எப்போதும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் அன்னைத் தமிழைப் பாதுகாப்பதில் முன்னத்தி ஏராகவும் இருந்து வருகிறது. இதை நாம் அடுத்த தலைமுறைக்கும் கொண்டுசேர்க்க வேண்டுமானால் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரம் பற்றி, இளைந்தலைவர் உதய் அண்ணாவின் வழிகாட்டுதலோடு மாணவர்கள் அனைவரும் ஓரணியில் இணைவோம்... வாருங்கள்...

மாணவர்களின் கல்வி உரிமையைக் கண்போலக் காக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதை தெளிவானது. பயணம் உறுதிமிக்கது. இடையூறுகள் அவதூறுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது. பெருமைமிக்க தமிழ்நாட்டின் மாணவர்களே வாருங்கள்! உங்களால் உருவாகும் ஓரணியில் தமிழ்நாடு!" என ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக் கனவை காவு வாங்குவது குறித்தும், தமிழ்நாடு அரசு மாணவர்களுக்குச் செய்யும் நலத்திட்டங்கள் குறித்தும் விவரித்து துண்டறிக்கை அளிக்கப்பட்டது.

ஜூலை 21ஆம் தேதி தொடங்கிய இந்த விழிப்புணர்வுப் பிரச்சாரம் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் நடைபெறும். இதை ஓர் இயக்கமாக மாணவர் அணி முன்னெடுக்கும் எனவும் மாணவர் அணி சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் ரெட்டி தோப்பு பகுதியில் அமைந்துள்ள மஜ்ரூல்உலும் தனியார் கல்லூரி வளாகத்திற்கு வெளியே, கல்லூரி முடிந்து வீடு திரும்பிய மாணவர்களிடம் திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் தே. பிரபாகரன் தலைமையில், மாவட்ட அவைத் தலைவர் மற்றும் தி.மு.க. நகர செயலாளர்கள் ஆறுமுகம், சபீர் அகமது ஆகியோர் முன்னிலையில் கல்லூரி மாணவர்களுக்கு "ஓரணியில் தமிழ்நாடு" குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் குறித்த துண்டறிக்கை வழங்கினர். மேலும், தமிழக அரசின் தவப்புதல்வன் திட்டம், காலை உணவு திட்டம், உரிமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம் உள்ளிட்ட பல முக்கிய திட்டங்கள் குறித்து மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி துணை அமைப்பாளர்கள் அம்சவேணி, ஜெயகுமார், கார்த்திக், சுபாஷ் நகர தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.